DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.44/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராணி (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

(**BNSS** பிரிவு **348-**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**)**

குறுக்கு விசாரணை **Date : 12.06.2026**

விபத்தில் இறந்துபோன ராஜ்குமார் எனது உறவினரா என்றால் இல்லை. சாட்சி கார்த்திகா எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டில்தான் குடியிருந்து வருகிறார். சாட்சி கார்த்திகா எனது வீட்டில்தான் குடியிருந்து வருகிறார் என்ற சங்கதியை போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். எனது வீட்டு சுற்று சுவருக்கு உட் பகுதியில் மரங்கள் வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது வீட்டிற்கு வெளியே உள்ள செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தேன் என்று எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

விபத்து ஏற்பட்ட இடத்திற்கும் நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்கும் சுமார் 300 – 400 அடி தூரம் இருக்குமா என்றால் சுமார் 75 அடி இருக்கும். விபத்து நடந்த இடத்திற்கும் கிழக்கு பகுதியில் பாலம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எந்த சத்தம் கேட்டு பார்த்தேன் என்றால் வாகனங்கள் மோதிக்கொண்ட சத்தம் கேட்டு

பார்த்தேன். சத்தம் கேட்டு விபத்தை பார்த்ததாக கூறியுள்ள நிலையில் விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். லாரியானது என் மீது மோதி எனக்கு காயம் ஏற்பட்டு நான் சிகிச்சை எடுத்துக்கொண்ட விபத்தை நான் போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். விபத்து நடந்த பகுதியானது குறுகலான சாலை பகுதி என்றால் சரிதான்.

விபத்து நடந்ததற்கு பின்னிட்டு இருசக்கர வாகனமானது சாலையில் எந்த பகுதியில் கிடந்தது என்றால் சாலையின் வலது பக்கம் கிடந்தது. விபத்தில் இறந்துபோன நபர் குடிபோதையில் வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல விபத்து எதுவும் நடக்கவில்லை என்றாலும், விபத்தில் இறந்துபோன நபர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**